| நம்மையும் நாட்டு மக்களையும் காப்போம் | தொற்றிலிருந்து தமிழகத்தை மீட்போம் |
|---|---|

செ.வெ.எண்: 04 நாள்: 02.07.2021

## *கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மலைவாழ் மக்கள் வாழும் குக்கிராமங்கள் உட்பட பல்வேறு கிராமங்களுக்கு சாலை வசதிகள் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

## *மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப. அவர்கள் தகவல்.*

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் (1.7.2021) அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தலைமையில் குறைவான மக்கள் தொகை கொண்ட இணைப்பு சாலை இல்லாத குக்கிராமங்கள் மற்றும் மலைவாழ் மக்கள் வாழும் குக்கிராமங்களுக்கு சாலை அமைத்தல் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
**டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் பேசியதாவது:**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இணைப்பு சாலை இல்லாத மலைவாழ் மக்கள் வாழும் குக்கிராமங்கள் உட்பட பல்வேறு கிராமங்களுக்கு சாலைகள் அமைக்க ஊரக வளர்ச்சித்துறை, வருவாய்த்துறை, வனத்துறை ஆகிய துறைகளின் மூலம் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இதில் சாலை அமைப்பதில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வனத்துறை மற்றும் வருவாய்த்துறையினரிடம் முன்மொழிவுகள் அனுப்பி அனுமதி பெற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். வனத்துறை மற்றும் வருவாய்த்துறையினர் மலைவாழ் மக்கள் மற்றும் குக்கிராமங்களில் வாழும் பொதுமக்கள் சாலை வசதிகள் பெறும் வகையில் அனுமதிகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும், 15 நாட்களுக்குள் நேரடியாக கள ஆய்வு மேற்கொண்டும், கருத்துரு தயார் செய்து அரசுக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். எனவே, துறை சார்ந்த அலுவலர்கள் முழுகவனம் செலுத்தி குக்கிராமங்களுக்கு இணைப்பு சாலை அமைக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாவட்ட வன அலுவலர் திரு.எஸ்.பிரபு இவப, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ரெ.சதீஸ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பி.பெரியசாமி, செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) திருமதி.மலர்விழி, உதவி செயற்பொறியாளர்கள் (ஊரக வளர்ச்சி), வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**

| முககவசம் அணிவீர் | தனி மனித இடைவெளி கடைப்பிடிப்போம் |
|---|---|